**தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களத்தில் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 496.44 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 483.82 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 12.62 மில்லியன் அதாவது 2.54 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 446.34 | 434.93 | 11.41 | 2.56 |
| மூலதனம் | 50.10 | 48.89 | 1.21 | 2.42 |
| மொத்தம் | 496.44 | 483.82 | 12.62 | **2.54** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 21601 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.50 | 14.58 | 14.50 | 17.42 | 75.00 | 50.77 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சமூக சேவைகள் திணைக்களத்தால் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

### 3.2.1 பாதீட்டு முரண்

திணைக்களத்தினால் சரியாக பாதீடு மதிப்பீடு செய்யப்படாமையால் 10 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ஒதுக்கீடு செய்த தேறிய ஏற்பாட்டில் 11 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையான வீச்சளவினக் கொண்டிருந்தது.

**3.2.2 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படல்**

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 13 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 2,523,596 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

21601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 811,862 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகள் 01 வருடம் முதல் 21 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கிழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| **நிதிப்பிரமாணம் 752(2)** | சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தினதும் தொழிற்பயிற்சி நிறுவனங்களிதும் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த 1088 பொருள் உருப்படிகள் பற்றாக்குறை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவை** | |
| 4.2.1(ஆ) மற்றும் (இ) வழிகாட்டல்கள் | நிறுவகத்தினால் ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 ஆண்டு காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட அனைத்து கொள்வனவுகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.5 செயலாற்றல்**

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினது செயல் நடவடிக்கைத் திட்டத்தினதும் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தால் நிறைவேற்ற வேண்டிய பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது 700 வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்குவதற்கும் 700 பயிலுனர்களுக்காக படிகள் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 314 நபர்களுக்கு தொழில்பயிற்சியும் 577 தொழில் பயிலுனர்களுக்கு படிகளை வழங்குவதற்கும் திணைக்களம் தவறியிருந்தது.

(ii) நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிறுவனத்திலிருந்து விசேட தேவையுடைய 120 பிள்ளைகளுக்காக சேவை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 98 பிள்ளைகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

(iii) மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட 98 பிள்ளைகளில் 21 பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கும் 15 பிள்ளைகள் முன்பள்ளி பாடசாலைகளுக்கும் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் எஞ்சிய 62 பிள்ளைகள் இரண்டு சந்தர்ப்பங்களில் எதற்கும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த 250 பயிலுனர்களுக்கான ரூபா 20,000 வீதம் ரூபா 5,000,000 பெறுமதியான உபகரணத்தொகுதிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. 219 பயிலுனர்களுக்கு மாத்திரம் ரூபா 3,800,000 தொகை செலவு செய்து உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 31 பயிலுனர்களுக்கு உபகரணத் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 12,000,000 ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தன.

(v) 02 சமூக சேவை அமைப்புக்களை பராமரிப்பதற்காக நிதி உதவி வழங்குவதற்கு 100,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த இரண்டு அமைப்புக்களுக்காக நிதி உதவியாக வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் ரூபா 30,000 சேமிக்கப்பட்டிருந்தன.

(vi) விசேட தேவைகளை உடைய பிள்ளைகளுக்காக இரத்தினபுரி பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிறுவர் வழிகாட்டல் நிலையத்தில் 75 பிள்ளைகளுக்காக எழுதுகருவிகள் கேட்கும் பொருட்கள் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளுக்காக ரூபா 400,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒவ்வொரு தேவைப்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட அளவு தொடர்பான தகவல்கள் வெவ்வேறாக அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் கீழ் நடாத்திச் செல்லப்படும் 08 தொழிற்பயிற்சி நிலையங்களுக்காக 510 சிறுவர்களை அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 386 சிறுவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

(viii) அலுவலக உத்தியோகத்தர்களுக்கான சைகை மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான திணைக்களத்தினால் திட்டவட்டமான திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட வேண்டிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கைகளும் செயலாற்றல் திட்டத்தில் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக

அப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் தொடர்பாக மதிப்பிடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

(ix) திணைக்களத்தினால் இனங்காணப்பட்டிருந்த 21 இலக்கிடப்பட்ட குழுக்களில் கீழே காட்டப்பட்டுள்ள 07 குழுக்கள் ஊடாக நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

யாசகர்கள் / வீதிச் சிறுவர்கள்
புற்றுநோய், தனசிமியா நோயாளர்கள்
காச நோயாளர்கள், குஷ்ட நோயாளர்கள்
சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டவர்களின் குடும்பங்கள்
அநாதைகள் / கைவிடப்பட்ட நபர்கள்
ஜனாதிபதி நிதியத்தின் பரிந்துரைகள் சமர்ப்பித்தல்
குடியகல்வு குடும்பங்களின் உறுப்பினர்கள்

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

சீதுவ தொழிற்பயிற்சி நிலையத்தின் நுழைவு வீதியை அமைப்பதற்கு ரூபா 75,000 உம் இளைப்பாறும் அறையின் சுகநலன் பிரிவினை திருத்தம் செய்வதற்கு ரூபா 67,000 உம் அலுவலகத்தின் சுகநலன் திருத்த வேலைகளுக்கு ரூபா 374,978 தொகையுமாக ரூபா 516,978 வழங்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் அந் நிதியேற்பாடு வேறு செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

சேவையில் ஈடுபட்டிருந்த போது மரணித்த 6 உத்தியோகத்தர்களின் சிறுபராய பிள்ளைகளுக்குரிய ரூபா 177,375 ஆன வங்கி சேமிப்பு பாஸ் புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 10 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 119 | 115 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 526 | 477 | 49 |
| (iv) | ஆரம்ப நிலை | 113 | 105 | 08 |
| (v) | ஏனையவை | 18 | 10 | 08 |
| | மொத்தம் | 787 | 717 | 70 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் போது தொழில்துறை 18 மதியுரை பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடமாக இருந்த அந்த 18 மதியுரை பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பயிலுனர் பயிற்சியளித்தல் செயற்பாடுகளும் தடைப்படுவதற்கு நேரடியதாக தாக்கமளித்திருந்தது.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 1,799,918 ஆன நிதிஏற்பாடு வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.